Volume 4 Issue 2 February 2023 E-ISSN: 2582-2063

# சங்ககால தமிழக அரசுகள் பற்றி ஓர் ஆய்வு

**R. சரவணன்**
Ph.D (Full Time) ஆய்வு மாணவர்
வரலாற்றுத்துறை, காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.

**டாக்டர்.சி.செல்லப்பாண்டியன்**
உதவிப்பேராசிரியர்
தேவாங்கர் கலைக்கல்லூரி, வரலாற்றுத்துறை, அருப்புக்கோட்டை.

**முன்னுரை**:

பொதுவாக சங்க கால தமிழகத்தின் காலம் என்பது கி.மு.300 முதல் கி.பி.300 வரையிலான காலகட்டத்தை பெரும்பாலான அறிஞர்கள் ஏற்றுக்கொண்டதாகும். இந்த காலகட்டத்தில் தமிழ் பேசக்கூடிய மக்கள் வாழும் பகுதிகளை தொண்டை நாடு, சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு போன்ற சேதங்கள் தமிழகத்தில இருந்து வந்துள்ளது. என்பதை உறுதிப்படுத்தும் விதமாக கி.மு.3ம் நூற்றாண்டில் அசோக மன்னர் தனது இரண்டாவது பாறைக்க கலலெட்டில் ஐந்து சுதந்திர ராஜ்ஜியங்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றல் பாண்டியர்கள், ரோழர்கள், சத்தியபுத்திரர்கள், கேரள புத்திரர்கள், தாமிரபரணி போன்ற தெற்கத்திய தேசங்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. நாம் இந்த கட்டுரையில் தமிழகத்தை தமிழகத்தை ஆண்ட சங்ககால அரசுகள் பற்றி சுருக்கமாக காண்போம்.

**தமிழகம்**:

தமிழகம் என்ற சொல் சங்க இலக்கியங்களில் பாடப்பட்டுள்ளன. சங்கப்பாடலான புறநானூற்றில் 168வது பாடலில் தமிழகம் எனற் சொல் இடம்பெற்றுள்ளது. தமிழக எலலையாக வடக்கில் வேங்கடலையையும், தெற்கில் குமரிமுனையும் கிழக்கிலும் மேற்கிலும் கடல்கள் எலலையாக இருந்துள்ளதை சங்ககால இலக்கியங்கள் சுட்டுகின்றன. இந்த நான்கு எலடைலக்கு உட்பட்ட பகுதியே தமிழகம் ஆகும்.

**தொண்டை நாடு**:

சங்ககாலத்தில் தொண்டைநாடு என்பது, வடக்கு எல்லையான வடவேங்கடம் முதல் தென்பெண்ணை ஆறு வரை உள்ள பகுதிகளை ‘தொண்டைநாடு’ என்ற அழைப்பர். இந்த நிலப்பகுதியில் நெல்லூர் மாவட்டத்தின் தென்பகுதி, வடஆர்க்காடு, சித்தூர் செங்கற்பட்டு, தென்ஆர்க்காடு மாவட்டத்தின் வடபகுதி போன்றவை அடங்கும். தொண்டை நாட்டின் தெனபகுதி “அருவா நாடு” என்று பழங்காலத்தில் அழைக்கப்பட்டு வந்துள்ளது. கிழக்கில் கிழக்குத்தொடர்ச்சி மலைத் தொடரும் திருப்பதி மலைத்தொடரும் தொண்டைநாட்டின் மலை வளங்களாகும். சங்ககாலத்தில் தொண்டை நாட்டின் பெரும்பகுதிகள் காட்டுப் பகுதியாகவே இருந்து வந்துள்ளது. இப்பகுதிகளை கரிகாலச் சோழன் கைப்பற்றி காட்டைத் திருத்தி நாடாக மாற்றினார் என்று தமிழ் நூல் பாடல்கள் விளக்கி கூறுகின்றன.

பெரிய நிலப்பரப்பை ஆண்ட அரசர்கள் **‘திரையர்’** என்றும் தொண்டையர் என்றும் வழற்கப்படடுளளனர். மாமல்லபரம் சங்ககால தொண்டைநாட்டில் துறைமுக நகரமாக இருந்துள்ளது. இந்நகரம் செல்வவளம் மிக்க நகராமக இரந்து வந்துள்ளது. என்பதை **“பெரும்பாணாற்றுப்படை”** என்ற சங்ககால நூல் எடுத்துரைக்கிறது. இந்நாட்டு நகரங்களில் தலைசிறந்த நகரம் காஞ்சி ஆகும். “புத்த சாதக கரைகள்” என்ற நூல் புத்தர் காலம் முதலே காஞ்சி மாநகரம் சிறந்து விளங்கி வந்துள்ளது என்பதை கூறுகிறது.

**சோழர் தேசம்**:

தஞ்சைக்க தென்கோடியில் உள்ள வெள்ளானுக்கம் தில்லைக்கு வடக்கே உள்ள வெள்ளாற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியை ஆட்சி செய்தவர்கள் சோழர்கள் ஆவார்கள். இவற்டறை சோழ நாடு என்பர். இந்த நாட்டில் திருச்சி, தஞ்சை தென்னாற்காடு மாவட்டத்தில்

தென்பகதியையம் கொ்ணடதாகும். இந்த சோழ நாட்டை காவிரி ஆறும் அதனை கிளை ஆளுகளும் பாய்ந்து வளப்படுத்துகின்றன. ‘‘பொன்கொழத்துவரும் காவிரி ஆறு பாய்ந்து வளத்தைக்கொடுப்பதால் ‘‘பொன்னி நாடு னன்றும் அழைக்கப்பட்டது. சோழநாட்டில் மருதநிலம் அதிக கொண்ட இந்நாட்டை சோழ மன்னர்கள் வளப்படுத்தியால் சோழர்களுக்கு ‘‘வளவர்’ என்ற பெயரும் உண்டு. சங்ககால சோழ மன்னர்களில் ஆகச்சிறந்தவன் கரிகாற்சோழனாவார். இந்நாட்டின் தலைநகரம் உறையுர் ஆகும். பின்னர் காவிரிப்பூம்பட்டினம் துறைமுக நகராமகவும் தலைநகரமாகவும் விறங்கியதாக சிலப்பதிகாரம் உரைக்கிறது. இந்நகரம் கடல் வாணிபத்தில் சிறந்து விறங்கியது என்பதை சிலப்பதிகாரம் பட்டினப்பாலை போன்ற நூல்கள் மூலம் நாம் அறியலாம்.

**பாண்டிய தேசம்:**

பழங்காலம் முதலாகவே தென் தமிழகத்தை ஆட்சி செய்து வந்ததற்கான சுவடுகள் பாண்ஊடிய தேசம் முழுமைக்கும் இன்றுவரை கிடைத்துவருகின்றன. சங்ககால பாண்டிய தேசமானது இன்று உள்ள மதுரை, இராமநாதபுரம், நெல்லை, சிவகங்கை, விருதுநகர், நாஞ்சில் நாடு போன்ற பகுதிகளை உள்ளடக்கியதாகும். பாண்டிய நாட்டில் மலை வளமும், வைகை, தாமிரபரணி ஆறும் இந்நாட்டை வளப்படுத்தி வந்துள்ளன. இதன் தலைநகரம் மதுரையும் துறைமுக நகரமாக கொற்கையும் இருந்துள்ளது. இதனை உறுதிபடுத்த கொற்கை துறைமுகத்தில் முத்துக்கள், ரோமாபுரி நாணயங்கள் வாணிபத் தொடர்பு இருந்தது என்பதை பரைசாற்றுகின்றன. கி.மு.4ம் நூற்றாண்டில் மௌரிய தேசத்திற்கு பாண்டியர்கள் மெல்லிய ஆடையை ஏற்றுமதி செய்தனை சாணக்கியர்(கெடில்யர்) பொருள்நூலில் கூறுகின்றார்.

மதுரையில் நக்கீரர் போன்ற புலவர்களை கூட்டிய தமிழ் ஆராய்ந்துள்ளனர் என்பது எம்மரபிற்கும் இல்லாத கூடுதல் சிறப்பாகும். புலவர்கள் மட்டுமல்லாது மன்னர்களும் கவிபாடும் புலமை பெற்றிருந்தனர். அவர்களில் பாண்டிமாதேவியரும் அடங்குவர். பாண்டியர்களில் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும் சிறந்தவர்களாவர்.

**சேர தேசம்**:

சங்ககால தேசமானது தற்போதைய கேரள மாநிலம் ஆகும். இவர்களை கேரளபுத்திரர்கள் என்றம் அழைப்பர். வானோங்கியமலைவளமும், காடுவளமும், மிகுதியாக இருந்துள்ளது. காடுகளில் தேக்கு, கருங்காலி, சந்தனம் போன்ற மரங்கள் அடர்ந்து காணப்பட்டுள்ளது அன்றைய சங்ககால சேரநாட்டில் யானைகள் ஏராளமாக வாழந்து வந்துள்ளது. இதன்மூலம் தந்தமும் சேரநாட்டின் செல்வப்பொருட்களான மிளகு, சந்தனம், ஏலம், மயிற்பீலிகளும் ஏற்றுமதி செய்யபட்டதால் நாட்டின் பொருளாதார வளம் பெகியுள்ளது. சேரநாட்டடின் தலைநகரம் வஞ்சி ஆகும். இந்த நகரத்திறகு கருவூர் என்ற பெயரும் உண்டு. முசிறி. தொண்டி போன்றவை துறைமுக நகரமாக செயல்பட்டு வந்துள்ளது. சேர நாட்டை நெடுங்காலமாக சேரர் என்ற மரபினர் ஆண்டு வந்தனர். சேர நாட்டுப்பொருட்களை ஏற்றிசென்ற கப்பல்களையும் அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் கொண்டுவரப்பட்ட கப்பல்களையும் வழிமறித்து கொள்ளையடித்த கொள்ளையர்களை சேர மன்னர்கள் அழத்துள்ளனர். சேர மன்னர்களுள் புகழ்பெற்ற மன்னர் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் செங்கூட்டுவன் போன்றவர்களாவர். பாண்டியர்களைப் போலவே சேர மன்னர்களும் தமிழை வளர்த்து வந்துள்ளனர் என்பதை பதிற்றுப்பத்து என்ற நூல் மூலம் அறியலாம்.

**கொங்கு தேசம்**:

கொங்கு தேசம் என்பது சேலம், கோவை, நீலகிரி போன்ற பகதிகளை உள்ளடக்கியதாகும். இந்த கொங்குதேசத்தில் பொன் மிகுதியாகக் கிடைத்து வந்தததால் இந்த தேசம் கொங்கு தேசம் என்று அழைக்கப்பட்டது என்றும் மலைகளில் மிகுதியகாக் கிடைத்த தேனின் காரணமாக இப்பெயர் பெற்றது என்றும் கூறுவர். கொங்கு நாட்டில் பல குறுநில அரசுகள் இருந்தனர். இன்றைய உடுமலைப்பேட்டை சங்ககாலத்தில் **முதிரிமலை நாடு** என்று அழைக்கப்பட்டது. அந்த நாட்டை குமணன் என்ற வேந்தர் ஆட்சி செய்து வந்தார். தற்போதைய தர்மபுரி பகுதியை அதியமான என்ற சிற்றரசர் ஆண்டு வந்தார். அவருடைய மரைநகர் தகடூர் என்று அழைக்கப்பட்டது. தற்போதைய கொல்லிழ மலைப்பகுதியை வல்வில் ஓரி என்பவர் ஆட்சி செய்து வந்தார். இவ்வாறு கொங்கு தேசமானது பல சிற்றரசர்களால் ஆழப்பட்டு வந்த நிலையில் சேரர் ஆட்சிக்கு உட்பட்டது. அக்காலத்தில் கொங்கு நாடடு கருவூர், கொங்கு மண்டல தலைநகரமாக திகழ்ந்துது.

**குறுநில மன்னர்கள்**:

தொண்டை நாட்டின் திருகோவனூரும் அதனை சூழ்ந்த பகுதிகளும் மலையமான் நாடு என அழைக்கப்பட்டு வந்துள்ளது. மலையமான்களுல் திருமுடிகாரி என்பவர் வள்ளலம் சிறந்த வீரனும் ஆவார். பிற்காலத்தில் திருமுனைப்பாடி நாடு என பெயர் பெற்றது. தற்போதைய திண்டிவணம் என்று அழைக்கப்படும் ஊரும் அதனைச் சுற்றியுள்ள் பகதியும் ஓய்மான் நாடு என அழைக்கப்பட்டது. இப்பகுதியை நல்லியக்கோடான் என்பவன் ஆண்டுவந்தான். பாண்டிய நாட்டில் பழனி மலைடயை பேகன் என்ற குறுநில மன்னன் ஆண்டு வந்தான். பரம்பு மலையை பாரியும், பொதிகை மலையை ஆய்வேள் என்ற குறுநில மன்னன் ஆண்டு வந்துள்ளார். இவர்களை போல் ஆங்காங்கே குறுநில மன்னர்கள் சங்ககாலத்தில தமிழகத்தை ஆண்டு வந்துள்ளனர்.

**முடிவுரை**:

சங்க காலத்தில் தமிழகத்தை ஆண்ட பெரு மக்கள் தமிழ் நாட்டையே சேர்நதவர். தமிழகத்திலேயே பிறந்து வளர்ந்தவர். தாமும் தமிழராக இருந்து, தம்மால் ஆளப்பட்டவரும் தமிழராக இருந்த காரணத்தால், தமது மொழியம் நாட்டு மொழியுமாகிய தமிழைத் தம் உயிர்போலக் கருதினார். அம்மொழியில் வல்ல புலவரையும், பாணரையும், கூத்தரையும் பேணிப் பாதுகாத்தனர், அவர்கள் வாயிலாக முத்தமிழையும் வளப்படுத்தினர்,

1. புறநானூறு பால் 168
2. Abraham, Shinu, Chera, Chola, Pandya. using archaeological evidence to identify the Tamil Kingdoms of early historic south India, Asian Perspectives the journal of Achaeology for asia and the Pacific, 2003 P.42.
3. Zvlebeil, Kamil, The Smile of murugan of Tamil Literature of South India, 1973, P.46.
4. L.P.Karu. Ramanathan Chettiar, Sangakala Tamilar Vazhvu, Jeevan Press, Madras, 1964, P.24-30.
5. Manoranjithamani. C, History of Tamil Nadu, Dave-Bery1 Publication, Tirunelveli, 2018P.13
6. Bale, . Thirupparamkundram, State Department of Archealogy, Governement of TamilNadu Madras. 1981, P.12.